இருக்கிறது. அதற்காக வேறு ஒரு உதாரணத்தைத் தேடி அலையத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 322, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

322—

கண்டிராதித்தம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசினர் உயர்நிலைப்பள்ளியாக மாற்றல்.

** 9665* **டாக்டர் சு. மணிமேகலை:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கண்டிராதித்தம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திருச்சி மாவட்டம் திருமானூர் ஒன்றிய கண்டிராதித்தம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை 1992-93-ம் கல்வி ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

முற்பகல் 10.10

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமானூர் ஒன்றியம், கண்டிராதித்தம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றித்தரும்படி 4-7-1991, 12-3-1992, 4-8-1992 ஆகிய தினங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடத்திலும் விண்ணப்பித்திருந்தேன். எனது கோரிக்கையை ஏற்று அதை உயர்நிலைப்பள்ளியாக மாற்றித் தந்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். பெண் கல்வியில் மிகவும் பின்தங்கிய திருமானூர் பகுதியில் பெண்களுக்கு என்று இதுவரை ஓர் உயர்நிலைப்பள்ளிகூட இல்லை. பெண்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தும் புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தும் எங்கள் புரட்சித் தலைவியின் அரசு இந்தப் பள்ளியை மகளிர் உயர்நிலைப்பள்ளியாக மாற்றித் தர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரிலே இருக்கின்ற ஒரே ஒரு பள்ளியையும்

பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளியாக மாற்றிவிட்டால் ஆண்கள் படிப்பதற்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் போய்விடும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்கு என்று இரண்டு பள்ளிகள் உள்ளன. பெண்களுக்கு என்று அரியலூர் தொகுதியிலே இதுவரையிலும் எந்தப் பள்ளியும் இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பகுதியில் ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி அமைக்க முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 323, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

323—

போக்கம்பாளையத்திலுள்ள திரு. மோகன் குமாரமங்கலம் இல்லத்தில் கிளை நூலகம்

***11334 டாக்டர் வெ. சரோஜா—**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியம், போக்கம்பாளையம் கிராமத்தில் திரு. மோகன் குமாரமங்கலம் அளித்த இல்லத்தில் ஒரு கிளை நூலகத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சங்ககிரி தொகுதி எலச்சிப்பாளையம் ஒன்றியம், போக்கம்பாளையம் கிராமத்தில் மக்கள் தொகை 800 ஆக இருப்பதால் அங்கு கிளை நூலகம் திறக்க இயலாது. இருப்பினும் பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை அவ்வூர்ப் பொது மக்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனத்தார் நிறைவேற்றித் தந்தால் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட எலச்சிப்பாளையம் ஒன்றியம், போக்கம்பாளையம் கிராமத்தில் மத்திய அமைச்சர் அவர்கள் உயர்திரு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுடைய தந்தையார் உயர்திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் வாழ்ந்த அந்த மாளிகையை அரசுக்கு ஒப்படைத்து விட்டதாக அறிகிறேன். ஒப்படைக்கப்பட்ட அந்தக் கட்டிடம் மேலும்